# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 21–ஆம் நாள், திங்கள்கிழமை

**இ.ம.எண். 10 /2024 இன் அ.வ.எண்.558/2004**

## CNR No. TNSA13-000101-2004

1. ராஜகோபால்
2. சந்திரன்
3. ராஜேந்திரன்
4. ராஜமாணிக்கம் (இறந்தவர்)
5. முருகேசன்

அனைவரும், தங்களுக்காகவும் நாவக்குறிச்சி
கிராம ஜங்கமர் சமுதாயத்திற்காகவும் . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பழனிமுத்து கவுண்டர் (இறந்தவர்)
2. ஸ்ரீராமன்
3. சின்னு
4. பாலு
5. தங்கராசு (இறந்தவர்)
6. முத்துசாமி . . . எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 15.04.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.ராஜேந்திர மகஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவை வடசென்னிமலை அருள்மிகு பாலதண்டாயிதபானி திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் மற்றும் ஆறகளூர் அருள்மிகு ஸ்ரீகாமனாதேஸ்வரர் திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் அவர்களையும் தாவாவில் சாட்சிகளாக விசாரிக்க அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

(2.1) மனுதாரர் இம்மனுவில் மனுதாரரும், மேற்படி தாவாவில் 1ம் வாதியும் ஆவார். மனுதாரர் இம்மனுவை தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாவில் குறிப்பிட்டுள்ள கோவில்கள் அனைத்தும் கிராம பொதுக்கோவில் என்று வாதிகள் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருவதாகவும், ஆனால் மேற்படி கோவில்களில் வடகரையான் என்கிற முத்தையா என்ற கோவிலை தவிர மற்ற அனைத்துக்கோவில்களும் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்திலும் பராமரிப்பிலும் இருந்து வருவதாகவும்,

(2.2) மேற்படி கோவில்களுக்கு உரிமையான சொத்துக்கள் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையால் பொது ஏலத்திற்கு விடப்பட்டுள்ளது என்றும், இந்த நிலையில் தாவாவில் குறிப்பிட்டுள்ள வடகரையான என்கிற முத்தையா கோவிலை தவிர அனைத்துக்கோவில்களும் அரசாங்க பொதுக்கோவில் என்ற விவரத்தை இவ்வழக்கில் ஆவணங்கள் மூலம் ருசுப்படுத்த மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்கள் குறித்து தாவாவில் சொல்லியுள்ள கோவில்களை செயல் அலுவலரால் தர்க்கார் நிலையில் நிர்வாகம் கவனிக்கப்பட்டு வருகிற இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், வடசென்னிமலை அருள்மிகு பாலதண்டாயிதபாணி திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் மற்றும் ஆறகளூர்

அருள்மிகு ஸ்ரீகாமனாதேஸ்வரர் திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் அவர்களையும் தாவாவில் சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்து 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

(3.1) இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை எதிர்மனுதாரர்கள் மறுக்கிறார்கள். தாவா கோவில் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோயில் என்றும், தாவாவில் பிரதிவாதிகளுக்கு தாவா கோவில்களை நிர்வகிப்பதற்கும், விழாக்களை ஏற்பாடு செய்து நடத்துவதற்கும், பூஜைகள் செய்வதற்கும் உரிமை இல்லை என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளதாகவும், மேலும் பிரதிவாதிகளையும், அவர்களது ஜாதியை சார்ந்தவர்களும், வாதிகளையும், அவர்களது ஜாதியை சார்ந்தவர்களையும் கலந்து ஆலோசிக்காமலும், கூட்டுறவு இல்லாமலும் தாவா கோவில்களின் விழாக்கள், பூஜைகள் எதுவும் நடத்தக்கூடாது என தடைக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என இரண்டு பரிகாரங்களை கேட்டுள்ளதாகாவும், மேற்படி வாதிகள் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.678/1987 என்ற தாவாவில் தாவா கோவில்களின் திருவிழாக்களை ஏற்பாடு செய்து நடத்துவதற்கும், பூஜைகள் செய்வதற்கும், பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதாகாவும்,

(3.2) வாதிகள் அவர்களது சாட்சியத்தில் ஊராளிக்கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்த 5 நாட்டாண்மைக்காரர்கள் தான் தொன்று தொட்டு வரும் நடைமுறைப்படி 9 கோவில்களின் விழாக்கள், விசேசங்கள், பூஜைகள் நடத்தி வருகிறார்கள் என்றும், ஜங்கமர் சமுதாயத்தைச் சார்ந்த எதிர்மனுதாரர்களுக்கு 6 வது கிருஷ்ணசாமி பண்டாரம் சாட்சியம் அளித்துள்ளதையும் ஆய்வு செய்தும், மேலும் வாதிகளே conducting என்பதற்கு பதிலாக Participating எனவும் நடத்துவதற்கு என்பதற்கு பதில் கலந்து கொள்வதற்கு என பரிகாரம் அளித்தால் போதுமானது என தாவா பிராதில் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையிலும் ஊராளி

கவுண்டர் வகையறாவை சேர்ந்த 5 நாட்டாண்மைக்காரர்கள் தொன்றுதொட்டு வரும் நடைமுறைப்படி நடத்தும் விழாக்கள், விசேஷங்கள், பூஜைகளில் வாதிகள் கலந்து கொள்வதில் பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என பரிகாரம் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பின் பேரில் வாதிகள் மேல்முறையீடு செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3.3) எனவே அ.வ.எண்.678/1987 ல் வழங்கிய பரிகாரம் இறுதியானது என்றும், எனவே அதே பரிகாரங்கள் கோரி இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த தாவா Resjudicata என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும், மேற்படி தாவா செல்லத்தக்கதல்ல என தெரிந்துகொண்டு மேற்படி தாவாவை நடத்தாமல் கடந்த 20 ஆண்டுகளாக நீட்டித்து வந்து தற்போது மேலும் காலம் கடத்த வேண்டி தாவா கோயில்கள் இந்து சமய அறநிலையத்துறைக்கு சம்பந்தப்பட்டதா இல்லையா என்பது குறித்து மேற்படி கோவில்களின் செயல் அலுவலர்களை சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஏற்கத்தக்கதல்ல.

(3.4) மேலும் தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் எந்தெந்த கோயில்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு கட்டுப்பாட்டில் உள்ளது என்று அரசிதழில் (நிலையான பதிவேடு) உள்ளதால் தேவைப்படின் அவைகளின் நகல்களை பெற்று தாக்கல் செய்யலாம் என்றும், மேலும் மேற்படி வழக்கில் கேட்டுள்ள பரிகாரத்திற்கு செயல் அலுவலர்களை சாட்சிகளாக விசாரிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், ஏற்கனவே மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள அ.வ.எண்.678/1987 ன் தீர்ப்புரையை பார்வை செய்தாலே போதுமானது என்றும், சாட்சிகளை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவாவில் கோரியுள்ள பரிகாரங்களுக்கு சம்மந்தப்படாதவை என்றும், அதில் எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக இல்லை என்பதாலும் ஏற்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. மனுதாரர்கள்/வாதிகள் தாவாவில் கோரியுள்ள கோவில்கள் அனைத்தும் கிராம பொது கோவில்கள் என்றும், மேற்படி கோவில்களை நிர்வகிப்பது தொடர்பாகவும், திருவிழாக்கள் நடத்துவது தொடர்பாகவும், பிரதிவாதிகள் மட்டுமே உரிய நபர்கள் இல்லை என்று விளம்புகை பரிகாரமும், வாதிகளின்றி பிரதிவாதிகள் தாவா கோவில்களில் திருவிழாக்கள் நடத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வடகரையான் முத்தையா கோவில்களை தவிர மற்ற கோவில்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்க மனுவில் கோரியவாறு ஆவணங்களை தாக்கல் செய்வது வழக்கிற்கு அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், வடசென்னிமலை அருள்மிகு பாலதண்டாயிதபாணி திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் மற்றும் ஆறகளூர் அருள்மிகு ஸ்ரீகாமனாதேஸ்வரர் திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் அவர்களையும் தாவாவில் சாட்சியாக விசாரிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 21–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.04.21 18:33:18 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.04.21 18:33:28 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**கூ.மா.உ.நீ. ஆத்தூர்**

அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 10/2024 இன்
அ.வ.எண்.558/2004
நாள் : 21.04.2025